1451

உ

ஷண்முகன் துணை.

காளயுக்தி வருஷ முதல் நேர்ந்த

கடும்பஞ்சச் சிந்து

இஃது மெ. 2 ...

J. S. பிரான்சிஸ் துரையவர்களின் மாணவரும்

தஞ்சை தமிழ் வித்வான்

V. S பாப்புகாசர் மாணவருமாகிய

அருட்கவி M. K. P. M. மனோரஞ்சித காயனர்

இயற்றியதை

... றைக்கர் V. T. குமாரவேல் காயனரால்

... ப்பிக்கப்பெற்றது.

... ஸ், மாயவரம்.

... -11-1924

பைசா 6.

O-,1MMN,K
N24
18242

ஷண்முகன் துணை.

காப்பு வெண்பா.

காளயுத்தி வருஷமுதல் கடும்பஞ்சம் நேர்ந்ததையான்
ஞாலமுடன் சிந்துநவிலுதற்கு ஆலமுண்ட
சித்த நருள்பாலா செல்வக்கணபதியே
உத்தமனே வந்தமிழை உரை.

பல்லவி.

காலத்தைபாரீர் கலிசாளயுக்தி முதல்
கடும்பஞ்சம் கேளீர்

அனுபல்லவி.

காலம்கலிகாலம் கரைகாணு பெருமோசம்
கவர்ந்த நினுலிசன் காட்டினுரிவ்வேஷம்

சரணம்.

(1) கலியுக மதிவித்த கபடுவஞ்சகஜாலம்
கற்றதினுல்மண்ணில் கண்டோம் நாமிக்கோலம்
நவிலும் கவிக்கன்று நாதநருள் நீளம்
நாதநாமக் கிரிகை ராகம் ஆதிதாளம்

நான் சொன்னதிதுவே அரனடி மறவாமல்
நவிலுதல் போதுவே

(2) [illegible] லாற்றிலே தண்ணீர் வரவுமில்லே
[illegible]கவலியாமல் விளரத்தார் நெல்வயல்கொல்லே
வருணபகவானும் மனது இறங்கவில்லே
வயலில் நட்டப்பயிர்கள் வாடிகாய்ந்ததும் தொல்லே

தொல்லையுண்டாச்சு ஏழைஜனங்களெல்லாம்
[illegible]யர்படலாச்சு

1242

(3) ஆண்டு காளயுக்தி அரும்பஞ்சம் வந்ததும்
அவனி ஜனங்களும் அரண்பதம் நொந்ததும்
மீண்டுமவர்களை விஷஜுரம் சூழ்ந்ததும்
வேணபேர் உலகினில் வேதனை ஆழ்ந்ததும்
விளம்பிடலாச்சு அரனருளனுதினம்
புலம்பிடலாச்சு

(4) மழைமுகம் காணாமல் மயங்கித்தவிக்கலாச்சு
வயலில் நட்டபயிர்கள் வாடி வதங்கி போச்சு
பிழையென்ன வருமென்று புலம்பி திரியலாச்சு
பிழைப்பதெவ்விதமென்று பெருமூச்சுவிடலாச்சு
பிதற்றிடலாச்சு ஏழைகளனுதினம்
களைத்திடலாச்சு

(5) மண்படைத்தோர்கென்றுமழைகாணாபெருஏக்கம்
வானத்தை பார்த்தாலோ மயங்குதல் மனவீக்கம்
பொன் படைத்தோர்க்கெல்லாம் பொருள் சேர்க்
[க வெகுநோக்கம்
போராய் குவித்தாலும் வட்டிக்கில்லை தூக்கம்
பிரபஞ்ச ஆசை சட்டுவத்தால் பெண்கள்
பிரட்டிடும் தோசை

(6) வெள்ளத்தால்பலஊரும் வீடும் முழுகிபோச்சு
மேல்மழையில்லாமல் விரைத்த விரையும்போச்சு
பள்ளம் படுகுழி பயநில்லாதிடலாச்சு
பார் பிரண்டோடினீர் பரவியகடலாச்சு
பவானி திருச்சி ரயில்வே லயன்களெல்லாம்
பரித்துதே முர்ச்சி

(7) ஆடுமாடுகளெல்லாம் ஆற்றில் மிதந்துபோச்சு
அளவற்ற மரமட்டை அலையிலே தூங்கிபோச்சு
காடுமேடுகளெல்லாம் கரையும் தெரியாபோச்சு
கட்டினமேல்மாடி கைப்பொருளழிவாச்சு

கஷ்டமுண்டாச்சு பிரஜைகளநுதினம்
நஷ்டமுண்டாச்சு

(8) பருப்பு பயர்படி பணம் மூன்று ஆச்சுது
பாரில்மிளகாய்சேர் பகர்ந்திட விச்சுது
நெருப்புப்பெட்டி ஆறு பைசாவுமாச்சுது
நெற்கலம் விலையது நிலையற்றுபோச்சுது

நேரிடலாச்சு பாமஜனமநுதினம்
கோரிடலாச்சு

(9) என்னுமுட்டை விலை சொல்லநடுங்குது
எவ்விதசாமானும் அதற்கேற்குது
தொல்லுலகில்ஜனம் சிவபதம் ஏங்குது
சிவனருள்வென்றைக்கும் செப்பிட நீங்குது

சிவன்செயல்பெரிதே உலகினில் யாவர்க்கும்
தேடிடாற்கரிதே

(10) வந்த ஜனங்களை வாவென்றழைப்பதில்லை
வயரிந்தவர்க்கன்னம் வைத்துப்படைப்பதில்லை
சொந்தக்காரர் வீட்டில் செல்லமனமுமில்லை
செழித்தவருங்காலம் தேடுவோமவர்களை

நினைத்திடலாச்சு கலி காலயுக்திமுதல்
நேரிடலாச்சு

(11) தந்தை தாய் உறவினர் சகலமும் மறந்ததும்
தாரத்தை விட்டு சிலர் ஊரைவிட்டகர்ந்ததும்
வந்தவர்க்கே கருவோம் என்று நினைந்ததும்
ஈசனின் பாதத்தை நேசமாய் புனைந்ததும்
எண்ணிடலாச்சு வறுமையின் நிலைமையால்
இகழ்ந்திடலாச்சு

கும்மி.

(1) நீலக்கருங்குயில் பெண்மயிலே யெந்தன்
நேரிழையே சொல்லக்கேளடி நீ
கலிகாலயுக்திமுதல் கலர்ந்திடும் பஞ்சத்தை
கருத்துட னுரைப்பேன் கண்மணியே.

(2) ஆற்றில்பெருவெள்ளம் வந்ததில்லை தஞ்சை
அவனி முழுதும் செழிக்கவில்லை
சோற்றுக்கு நெல்லு கிடைக்காமல் ஏழைகள்
சோர்வை யடைந்தனர்ருபடி.

(3) செப்புக்குடங்களும் செம்பு தவலையும்
சீர்வந்த குத்துவிளக்குகளும்
ஒப்பிடனமது செப்பி யீடுவைத்
உடுத்திட துணியும் வாங்கின

(4) ஆடு மாடுகளை விற்ற வருண்டுமே
ஆவலடங்காமல் ஏழைகளும்
வடு மரம் கழி கோழி குஞ்சுகளும்
வேண சாமான்களை விற்றனரே.

(5) பெட்டி பேழைகளும் முட்டிக்கு வளையும்
பூணும் அரணகடுக்கனையும்

அட்டியில்லாமலே செட்டியிடம் விற்று
அருந்த அரிசியும் வாங்கினரே

(6) இவ்வளவும் விற்று காணுமல் ஏழைகள்
எக்கமு முற்று மனதுவாடி
சேவ்வல்லிக்காயும் கிழங்குகளை தின்று
ஜீவித்திருந்தனராகுமடி,

(7) தரணியிலேதை மாநத்திலே எங்கும்
சமபா அருத்திடும் நாளையிலே
குருணி நெல் ஐந்தணுவிற்ற அதிசயம்
கூரமனதேனக்கஞ்சுதடி

(8) ஐந்தணுவானுலும் வஞ்சகம் நீக்கி நெல்
அன்புடன் ஏழைக்களிப்பதற்கு
நெஞ்சம் வரவில்லை பஞ்சமிகுமென
நெற்கள் வைத்திருக்கும் நேசருக்கே.

(9) சிந்தை மகிழ்ந்துமே யேந்தசாமான்வாங்க
சித்தம் வெகுவாக அஞ்சுதடி
தஞ்சை புவிதனில் பஞ்சம் வராமலே
சத்தியின் பாகனை கோரினரே.

(10) இவ்வித விழயம் யீசன் அரிந்திட
இமையவர் மாமுனிதேவர்களும்
சேவ்வையாய் கோர்ட்டினில் தாவாநடத்தியே
சிவனுக்கனுப்பினர் சம்மனையே.

(11) சம்மனை பார்த்தன்று யீசன் கருதியே
சஞ்சல மகற்ற தேவர்கள்முன்
உம்மிஷ்டம்போலவே மானிடர் யாவற்கும்
உத்தமபலனளிப்பே னென்றார்.

(12) அங்ஙடயா சென்று பிரபவா வந்தபின்
அளவில்லா செல்வம் செழிக்குமென்று
டக்ஷமாய் போற்றும் பரமனடியாற்கு
பகர்ந்தருள் தந்து கயிலை சென்றார்.

(13) இத்தகை யானுரைத்த கவியில் குற்றம்
யேற்படினும் பொருப்பார் பெரியோர்
வித்தகன் பாப்புதாசன் பணிகொண்டு
விளம்பினேன் நாமம் மனோரஞ்சிதன்.

காணவேணும் காணவேணும் என்ற மெட்டு.

(1) கலியுகமதிலிதுபோல் பஞ்சம் பெரியோர்
கண்டவரேவருமில்லை கொஞ்சம் கலி
சாளயுத்தி ஆண்டு முதல்
சோளம் கேழ்வரகென்பதும் கஷ்டம் மகாகஷ்டம்

(2) கலம் நாலுரூபாய் விற்றதுண்டோ நெல்லுயுகம்
நான்கிலு கண்டிருந்தால் நீ சொல்லு அதற்கும்
நாட்டிலே கிடையாதென்றும்
ஓட்டை படியளந்தும் நங்கை அளிக்கவேங்கை.

(3) கதிரவன் மரைந்தவுடன் மனமும் அன்னக்
கவலையை நினைத்து எழை ஜனமும் தினம்
கைத்தொழிலை கருதி சென்றும்
மெய்வருந்தியே கடந்தும் காணும் மனம் நாளும்.

(4) தேவ ரிஷி மூவர் மாமுனிகள் கோட்டீஸ்
செப்பினார் அரனுக்கவா இனிகேள் இனி
செப்புவேன் பிரபவமுதல்
ஒப்பிய அருள் தருவேனென்றார் யீசன் சென்றார்.

ஆசியா ஆப்பிரிக்கா என்ற மெட்டு.

(1) காணகிடையாதபெண்ணேவேணநாள்பழகிஎன்னை
கருத்தினில் நினையாதேன்ன வஞ்சமோ கலி
காலயுத்தி வருஷ முதல் பஞ்சமோ.

(2) அட்டியில்லாது தினமும் கட்டிக்கரும்பேயுனக்கு
அன்னமளித்தே மகிழ்ந்து அருமையே விட்டு
அகன்றிட நினைந்தாய் காலவருமையே. [போனால்

(3) கொஞ்சநாள் கழித்தோமானால் பஞ்சமுமகன்று
கோதையே நினைக்கெனடி வஞ்சமே பதில்
கூறடி புன்வாய் திறந்து தஞ்சமே

(4) தோடு அட்டிகை புடவை மாடுகன்று வீடுனக்கு
செப்புகுடம் அண்டா செம்பு வாங்கியே அளிப்
[பேன்
சிந்தையில் வருத்தம் வேண்டாம் பாங்கியே

(5) வேலனினருளை தினம் காலை மாலை ஓதிசென்றால்
விண்ணிலே நாம் செய்த பாவம் மீளுமே நமக்கு
பொன் பொருள் பூஷணம் வாய்க்கும் நாளுமே

(6) வள்ளி தெய்வானையுடன் புள்ளிமயில் வேலோன்
[வாழ்க
வானவர் முனிவர் தேவர் வாழ்கவே சிந்து
வாங்கியே படிக்கும் மன்பர் வாழ்கவே.

(7) பாலன் மனோஞ்சிதன் சொல் காலயுத்தி சிந்து
[ணர்ந்து
பரமனைத் துதித்தே தினம் கோரியே உலகில்.
பஞ்சமணுகாமல் கேழ்ப்பாய் நாரியே

M. K. P. M. மனோஞ்சித நாயனார் புக்ஸெலர்,
ஸ்ரீஸ்மில் கார்ப்பெண்டர், (மாங்குடி.)